**தலைப்பு 244 – வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் மூன்றாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன வியாபார மற்றும் முதலீட்டு கொள்கைகள் திணைக்களத்தால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

தலைப்பு 244 - வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 செப்தெம்பர் 25 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்

கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்படத் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கு நடவடிக்கைகளின் தன்மை | | கணக்கீட்டு உத்தியோகத்தரால் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ள அறிக்கைகளின் பந்தி தொடர்பு |
|---|---|---|---|
| நிதிப் பிரமாணம் | | | |
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்துவதாகவும் நடப்பாண்டிற்காக ஆண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்கை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்திருத்தல் | 1. பாதீட்டு மதிப்பீடு நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படாமை | 2.3 |
| | | 2. எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் அடையப்படாமை | 2.2.1 |
| | | 3. பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை | 2.2.2 |

| | | | |
|---|---|---|---|
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவதற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாக சேகரிப்பதற்கும் கிடைக்கப்பெறும் பணத்தை கணக்கு வைப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்பாடுகளுக்காக அதிகாரமளிப்பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கும் அந்த அரசின் நிதியிலிருந்து அற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதெனவும் | கட்டுநிதி மதிப்பீடு தயாரித்தலில் குறைபாடு | 2.5 |
| 128(1)(இ) | நிதிப் பிரமாணம் மற்றும் அரசின் ஏனைய குறைநிரப்பு அறிவுறுத்தல்களையும் தனது திணைக்களம் பின்பற்றப்படுவதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்றதெனவும் | 1. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை | 2.6 |
| | | 2. இணங்காமைகள் | 2.7 |

**2. பொருண்மையானதும் மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

---

**2.1 திணைக்களத்தின் பிரதான பணிப்பொறுப்புக்கள்**

---

திணைக்களத்தால் சுயமாக பிரதான பணிகளை அமுல்படுத்துவதற்காக கீழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் 03 பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன.

01. வியாபார கொள்கைப் பிரிவு
02. முதலீட்டு கொள்கைப் பிரிவு
03. நிர்வாக, கணக்குகள் மற்றும் செயற்திட்டப் பிரிவு

அந்த ஒவ்வொரு பிரிவினதும் பணிகளின் அடைவு பின்வருமாறு இருந்தது.

### 01. வியாபாரக் கொள்கைப் பிரிவு

வியாபாரக் கொள்கைகளைத் தயாரித்தல், அமுல்படுத்துதல் மற்றும் வியாபார மற்றும் சுங்கத் தீர்வை கொள்கைகளைத் திருத்தம் செய்தல் போன்ற வியாபாரத்திற்கும், கைத்தொழில்களுக்கும் மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளில் விசேட வியாபார பொருட்கள் வரி தொடர்பான நடவடிக்கைகள் இந்தப் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும், சுங்கத் நிர்வாகத்திற்குரிய பிரமாணங்கள் மற்றும் முறைப்பாடுகள் தொடர்பாக பணிகளைத் தொடர்புபடுத்தலும் மேற்கொள்ளப்படுகின்றது. வியாபாரப் பிரிவின் கீழ் நிறைவேற்றப்படுகின்ற பிரமான பணிகள் பின்வருமாறு இருந்தது.

I. வியாபாரக் கொள்கை
II. சுங்க வரிக் கொள்கை
III. சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

### 02. முதலீட்டு கொள்கைப் பிரிவு

அரச நிறுவனங்களில் முதலீடு தொடர்பான கொள்கை ரீதியான விடயங்கள் சம்பந்தமான பொறுப்புக்கள் முதலீட்டுக் கொள்கைப் பிரிவிற்குரியதாகக் காணப்பட்டது.

### 03. நிர்வாகம், கணக்குகள் மற்றும் விசேட செயற்திட்டப் பிரிவு

மனித, பௌதீக மற்றும் நிதி வள முகாமைத்துவம், நிர்வாக மற்றும் நிதி நடவடிக்கைகள் இந்த பிரிவிற்குரிய பொறுப்பாகும்.

## 2.2. செயலாற்றல்

### 2.2.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

2015 - 2030 காலத்தில் அடையப்பட வேண்டிய 17 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பாக திணைக்களம் கவனஞ் செலுத்த வேண்டியிருந்த போதிலும், அதன் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தை உள்ளடக்கி திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டில் ஆவரணங்களின் பிரகாரமும் அவ்வாறான இனங்காணல்கள் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் திணைக்களத்தின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்குரிய ஆரம்பக் கட்டமேனும் உடன்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

### 2.2.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தால் 33 பிரதான பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த போதிலும், வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் அந்த 33 பணிகளில் 11 பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. தெரிவின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது நிறைவேற்ற முடியாது போனதாக அவதானிக்கப்பட்ட 04 பணிகள் தொடர்பாக விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 19(அ) பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளும் அரச கொள்கைகளுக்கும் இணங்க சுங்கவரி பதிவழித்தல், கைவிடல் மற்றும் சுங்கவரி தொடர்பான விபரங்களை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரித்தல் மற்றும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் நிறைவேற்றப்படாமை.

(ஆ) 2017 ஆம் ஆண்டில் வியாபார மற்றும் முதலீட்டுத் தரவு முறைமையை அபிவிருத்தி செய்வதற்கு திணைக்களம் இதுவரையிலும் நடவடிக்கை எடுக்காமை.

(இ) சுங்க வரிச் சட்டத்தின் 22 ஆவது பிரிவின் கீழ் விசேட அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் மீள் ஏற்றுமதிக்காக அங்கீகாரம் வழங்குதல் என்பன திணைக்களத்தின் பணியாக இருந்தது. எனினும், அது இடம்பெறுகின்றதா என பரீட்சிக்கும் திட்டமுறைமையொன்றைத் தயாரித்தல் மற்றும் மீள் ஏற்றுமதி செய்யப்படாத பொருட்கள் காணப்படுமாயின் அது தொடர்பாக எடுக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்.

(ஈ) அரசாங்க நிறுவனங்களுக்காக இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களுக்காக சுங்க வரி செலுத்துவதற்கு அந்த சந்தர்ப்பங்களின் போது நிறுவனங்களில் நிதிஏற்பாடு போதியளவில் இல்லாதவிடத்து உரிய பொருட்கள் தாமதமின்றி விடுவிப்பதற்காகச் செலுத்த வேண்டிய சுங்கவரி ஆண்டின் இறுதியின் போது சேமிக்கப்பட்ட நிதிஏற்பாடு மூலம் செலுத்தும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் பொருட்களை விடுவிப்பதற்கு அங்கீகாரம் வழங்குவதற்கு தேவையான ஏற்பாடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை. (2007 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை அவ்வாறு நிலுவையாக இருந்த தொகை ரூபா 19,483.85 மில்லியனாகக் காணப்பட்டது)

**2.3 செயற்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

---

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டு காலப்பகுதியில் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடு பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் மீளாய்வாண்டின் தகவல்களுக்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் என்பன கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டில் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டெழுபவை | 831.3 | 750.2 | 81.1 | 9.8 |
| | மூலதனம் | 3.15 | 1.7 | 1.45 | 46.0 |
| | **மொத்தம்** | **834.45** | **751.9** | **82.55** | **9.9** |
| 2014 | மீண்டெழுபவை | 755.76 | 736.07 | 19.69 | 2.6 |
| | மூலதனம் | 6.18 | 5.28 | 0.9 | 14.6 |
| | **மொத்தம்** | **761.94** | **741.35** | **20.58** | **2.7** |
| 2015 | மீண்டெழுபவை | 1157.1 | 1156.56 | 0.53 | |
| | மூலதனம் | 4.67 | 4.45 | 0.23 | 4.9 |
| | **மொத்தம்** | **1161.77** | 1161.01 | **0.76** | **0.1** |
| 2016 | மீண்டெழுபவை | 49.93 | 47.07 | 2.86 | 5.7 |
| | மூலதனம் | 5.1 | 3.08 | 2.02 | 39.6 |
| | **மொத்தம்** | **55.03** | **50.15** | **4.88** | **8.9** |
| 2017 | மீண்டெழுபவை | 49.73 | 44.92 | 4.81 | 9.7 |
| | மூலதனம் | 3.2 | 0.71 | 2.49 | 77.8 |
| | **மொத்தம்** | **52.93** | **45.63** | **7.30** | **13.8** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டில் 02 செலவின விடயங்களுக்காக ரூபா 3,900,000 கூட்டுத்தொகையான குறைநிரப்பு மதிப்பீட்டு நிதிஏற்பாடு பெறப்பட்டிருந்ததுடன் அந்த அதிகரிப்பு 56 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

(ஆ) மூலதன செலவின விடயமொன்றில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடான ரூபா 300,000 தொகை அந்த ஆண்டின் இறுதியிலும் செலவிடப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) நடப்பாண்டின் செலவின விடயத்திற்காக 2017 பெப்ரவரி 01 ஆந் திகதி ரூபா 1,000,000 தொகையான குறைநிரப்பு ஒதுக்கீட்டின் மூலம் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியின் போது, ரூபா 905,354 தொகை அதாவது குறைநிரப்பு நிதிஏற்பாட்டில் 91 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 08 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையினால் அந்த செலவின விடயங்களுக்குரிய நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்பு தேறிய நிதிஏற்பாட்டில் 27 சதவீதம் முதல் 92 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 2.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய விடய இலக்கம் 24401 இன் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 3.50 | 3.15 | 1.40 | 1.69 | 12.00 | 8.48 |

## 2.5 கட்டுநிதிக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

திறைசேரி செயற்பாட்டுகள் திணைக்களத்தின் 2017 சனவரி 09 ஆந் திகதிய TO/BE1/2/IMP/329/2017 ஆம் இலக்க 2017 ஆம் ஆண்டின் கட்டுநிதி எல்லையைத் தீர்மானித்தல் தொடர்பாக திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரகாரம் மாதாந்த கட்டுநிதி எல்லை, காலாண்டிற்கு ஒரு தடவை மீளாய்வு செய்யப்பட்டு உள்ளபடியான தகவல்களை அறிக்கையிட்டு கட்டுநிதி எல்லையை நிர்ணயித்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், திணைக்களம் இதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

## 2.6 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகயும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணங்கள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றிக்கை |
| (ஆ) | கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

## 2.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

திணைக்களத்தின் வாகனமொன்றிற்கு 2017 மே 18 ஆந் திகதி இடம்பெற்ற விபத்து தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பூரண அறிக்கை கணக்காய்வுத் திகதியான 2018 ஏப்ரல் 04 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

மேற்கூறப்பட்ட 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணி தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தால் ஆளணி வேதன செலவின தொகுதிக்காக ரூபா 30.19 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நபரொருவருக்கான வருடாந்த செலவினம் ரூபா 642,290 ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 14 | 09 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 28 | 24 | 04 |
| (iv) | ஆரம்ப நிலை | 13 | 12 | 01 |
| | **மொத்தம்** | **58** | **47** | **11** |